# வானவில்

**VAANAVIL**

| இதழ் 98 | மாசி 2019 |
|---|---|
| ISSUE 98 | FEBRUARY 2019 |


# அதிகாரப் பகிர்வுக்கு எதிரான ஐ.தே.க. – த.தே.கூ. கூட்டுச் சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டும்!

இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுக்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் ஓரளவு வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பது 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகச் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறைமைதான்.

இதற்கு முன்னரும் பின்னரும் செய்து கொள்ளப்பட்ட பண்டாரநாயக்க – செல்வநாகம் உடன்படிக்கை (1957), மாவட்ட சபைகள் மசோதா (1965), மாவட்ட அபிவிருத்தி சபை மசோதா (1978), சந்திரிகா அரசின் தீர்வுப்பொதி (2000) என்பன பேரினவாத சக்திகளாலும், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியாலும், தமிழ் தரப்புகளாலும் குழப்பப்பட்ட நிலையில் மாகாணசபைகள் முறைமைதான் அரைகுறையாகவேனும் இன்றுவரை தாக்குப்பிடித்து வருகின்றது.

இதற்கு முக்கியமான காரணம், இந்த முறைமைக்கு அத்திபாரமாக அமைந்த இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை 1987 இல் செய்து கொள்வதற்கு இந்தியா செய்த அர்ப்பணிப்பான முயற்சிதான். அந்த முயற்சியும் இலகுவாக நிறைவேறிவிடவில்லை.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட நேரத்தில் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் பிரசித்திபெற்ற அமெரிக்க விசுவாசியும் (இன்றைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தாய் மாமனார்), அதேபோல பிரசித்தி பெற்ற இந்திய எதிர்ப்பாளருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன இருந்தார்.

அவரது அரசுடன் இந்தியாவின் ஆதரவையும் பயிற்சியையும் பெற்ற தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. எனவே அவர்கள் இரு தரப்பினரையும் இந்த ஒப்பந்தத்தில் ஈடுபட வைப்பதில் இந்திய




அரசாங்கம் பலத்த நிர்ப்பந்தத்தைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் வேண்டா வெறுப்பாகவே இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர்.

இருந்தும் ஜனாதிபதி ஜே.ஆர். ஆட்சியின் பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாசவும், அமைச்சரவையில் இருந்த அவரது சகாக்கள் சிலரும் ஒப்பந்தத்தை மிகவும் கடுமையாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பின் குறியீடாக இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை கடற்படை சிப்பாய் ஒருவன் துப்பாக்கிப் பிடியால் தாக்கி கொலை செய்யவும் முயன்றான்.

இருந்தும் ஒப்பந்தம் வெற்றிகரமாக கைச்சாத்தாகி, ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகிய ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும் தேர்தல் நடந்து வெற்றிகரமாக செயற்பட ஆரம்பித்தது. மாகாண சபை தேர்தலில் புலிகளுக்கு எதிரான ஏனைய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் வெற்றி பெற்று வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்டதால் ஆத்திரமடைந்த புலிகள், வடக்கு கிழக்கு


தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# பிளாஸ்ரிக்கை ஒழிப்போம்!

**உ**லகெங்கிலும் பிளாஸ்ரிக் பொருட்களின் பயன்பாடு தற்போது கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. பிளாஸ்ரிக் பைகள் இல்லாமல் இன்று எந்த மூலை முடுக்கிலும் வர்த்தகம் நடைபெறுவதில்லை. அன்றாடம் எமது வீடுகளில் சேரும் கழிவு மற்றும் குப்பைகளில் பிளாஸ்ரிக்கின் பங்கு கணிசமாக உள்ளது. 'பிளாஸ்ரிக் எனும் கொடிய அரக்கன்' என்ற தலைப்பில் tectheme.com இல் வெளியான கீழேயுள்ள கட்டுரை பிளாஸ்ரிக் தொடர்பாக அருமையான விளக்கத்தை அளிக்கின்றது.

★

**வா**னுயர் கோபுரங்கள், விரைந்து செல்லும் வாகனங்கள், பாரிய தொழிற்சாலைகள் என தொழில்நுட்பத்தின் உச்ச கட்டத்தில் இருக்கும் இருபத்தியோராம்  நூற்றாண்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த நவீன உலகில் பல்வேறுபட்ட பொருட்களும் எமது பூமித்தாயினை அச்சுறுத்தி பூமியில் எமது இருப்பை கேள்விக்குறியாக்குகின்றன. அவ்வாறான பொருட்களுக்கெல்லாம் தலைமை தாங்கி எம்மை மெல்லக் கொல்லுபவை இந்த பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் தான்.

பல வருடங்களிக்கு முன்  பிளாஸ்ரிக் அதிக பிரயோசனம் மிக்க புதுமையான பொருளாக அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் தற்போது பிளாஸ்ரிக்கின் பிடியில் இருந்து உலகைக் காப்பது பற்றி உலகின் பல்வேறு நாடுகளும் முழுமூச்சாக போராடி வருகின்றன. பிளாஸ்ரிக் இயற்கையாக அழிவடைவதில்லை. இதன் உற்பத்தியின் போது மூலப்பொருளாகவும் சக்தியாகவும் படிம எரிபொருட்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. எனவே, உற்பத்தியின் போதும் பாவனையின் போதும் தொடர்ச்சியான சுற்றாடல் தாக்கத்தை  இது ஏற்படுத்துகிறது.

இரசாயனப் பௌதிகத்தின்படி பிளாஸ்ரிக் 'பொலிமர்' என விபரிக்கப்படுகிறது. மேலும் 'மொனோமர்' இலிருந்து பொலிமர் தயாரிக்கப்படுகிறது. இரசாயனச் சேர்க்கை மற்றும் 'மொனோமர்' இன் ஒழுங்கிற்கேற்ப 'பொலிமர்' வேறுபட்டுக் காணப்படும்.இவற்றின் இரசாயன இயல்புகளுக்கு ஏற்ப பிளாஸ்ரிக் இரு வகைப்படுத்தப்படும். அவையாவன கடின பிளாஸ்ரிக், சீற் பிளாஸ்ரிக்  என்பனவாகும். கடின பிளாஸ்ரிக்குகளுக்கு உதாரணமாக சாதாரணமாகப் பெரிய தடிப்பான திண்மங்களான கொள்கலன்கள், கோப்பைகள், பிளாஸ்ரிக் தளபாடங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். சீற் பிளாஸ்ரிக்குகளுக்கு உதாரணமாக மெல்லிய சீற்களான பொலிதீன், ஷொப்பிங் பைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

அலங்காரப் பொருட்கள், பற்தூரிகை, தொலைக் காட்சிப்பெட்டி, கையடக்கத் தொலைபேசி, கணனி, விளையாட்டுப் பொருட்கள, வாகனங்கள் என நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்திலும் பிளாஸ்ரிக் பொருட்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

சாதாரணமாக அன்றாடம் இப் பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்துவதால் மட்டுமே சிறுநீரகப் பாதிப்புகள், சுவாசப் பிரச்சினை, ஆண்மைக் குறைபாடு எனப் பல உடல் நலக் குறைபாடுகள் ஏற்படுகின்றன என மருத்துவர்கள் அடிக்கடி கூறுகின்றனர். இந்நிலையிலே, அவை குப்பைகளாக மண்ணில் போடப்படும் போது ஏற்படப் போகும் அபாயங்களை சாதாரணமாகக் கருதி விடமுடியாது.

பிளாஸ்ரிக் ஆயிரக்கணக்கான வருடங்களாக உக்கிச் சிதையாமலிருக்கும் தன்மை மிக்கது. இதன் காரணமாக பிளாஸ்ரிக் கழிவுகள் மழை நீரை நிலத்தினுள் நுழைய விடாமல் தடுத்து, நிலத்தடி நீரின் பற்றாக்குறையினை அதிகரிக்கின்றது. கழிவுகள் இயற்கையாகச் சிதைந்து அழிவதை 'உயிர்மச் சிதைவு'(Bio – Degradation) என்பார்கள். இதனைப் பிளாஸ்ரிக் தடுத்து நடைபெறவேண்டிய இயற்கைச் சுழற்சியினைத் தடுத்து விடுகின்றது. நிலத்தினுள் செல்லும் காற்றினை அளவினையும் அழியாத பிளாஸ்ரிக் தடுத்து, மண்ணினுள் வாழும் நுண்ணுயிர்களின் வாழ்க்கையினைச் சீரழிக்கின்றது. பிளாஸ்ரிக் உறையினுள் கிடக்கும் உணவுகளை உண்டு பறவைகள், மிருகங்கள் எனப் பல உயிர்கள் உயிரிழக்கின்றன.

கடலில் பல்லாயிரம் தொன் பிளாஸ்ரிக் மிதக்கின்றது. பாசி என இதனைக் கருதும் மீன்கள் இதனை உண்டு, மீன்கள் ஊடாக மனிதர்கள் உண்ணும் மீன் உணவிலும் பிளாஸ்ரிக் பொருட்கள் கலந்து வருகின்றன.

இதுமட்டுமல்லாது உலகம் முழுவதும் பயன்படும் பிளாஸ்ரிக் பைகள் சரியான முறையில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாது, முறையற்ற முறையில் அப்புறப்படுத்தப்படும்போது அல்லது வீதிகளில் எறியப்பட்டு, மண்ணில் உக்காது, நிலத்தடி நீர்வரை சென்று உக்காது தங்கி, நிலத்தடி நீரையும் பிளாஸ்ரிக் பொருட்கள் மாசு படுத்துகின்றன.

எனவே பிளாஸ்ரிக் பொருள்கள் சில நிமிடம் பயனை தந்து விட்டு சில நூற்றாண்டுகளுக்கு எமக்கும் இந்த மண்ணுக்கும் தீராத தீமையைத் தந்துவிட்டு போகின்றன என்பதை நாம் அனைவரும் நன்கு உணர வேண்டும்.

பிளாஸ்ரிக் பொருட்களுக்கு மாற்றீடாக பயன்படுத்தக் கூடிய பொருட்கள் பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். எம்மால் இயன்றளவு பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை குறைக்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே எமது உலகை அழிவின் விழிம்பில் இருந்து காப்பாற்ற முடியும்.

★

இதுவரை மனிதர்கள் இயற்கைக்கு எதிராகச் செய்த தவறுகளால், புவி வெப்பமடைகின்றது, ஆறுகள் காணாமல் போகின்றன. நீர் அடியோடு உறிஞ்சப்படுவதால், நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்துக்கு சென்று விட்டது. இரசாயன உர பயன்பட்டால் உதவாமல் போய்க்கொண்டிருக்கிறது, மண். இயற்கைக்கு எதிராக மனித செயல்பாடுகளால் மனித இருப்பு கேள்விக்குறியாகின்றது. சூழல் கெட்டால் வருங்கால சந்ததியினருக்கு மிகப்பெரிய நெருக்கடி ஏற்படும் என்பதைக் கருத்தில்கொண்டு அனைவரும் இயற்கைக்கு எதிராகச் செயல்படுவதை நிறுத்த முன்வர வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப  விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# இரணைமடு குள தண்ணீரும் ஏழை விவசாயிகளின் கண்ணீரும்!



**அ**ண்மையில் பெய்த பெருமழை காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகினர்.

இந்த வெள்ளப்பெருக்கின் போது கிளிநொச்சியில் அமைந்துள்ள வட மாகாணத்தின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான இரணைமடுக்குளம் நிறைந்ததால் அதன் வான் கதவுகள் திறக்கப்பட்டு பெருமளவு நீர் கடலினுள் செலுத்தப்பட்டது. இது ஒரு தவிர்க்க முடியாத அசாதரண நிகழ்வாகும்.

இரணைமடு குள வான்கதவுகளில் உள்ள குறைபாடுகளும், அவற்றை உரிய நேரத்தில் திறப்பதில் நீர்ப்பாசன அதிகாரிகள் அசமந்தமாக இருந்தமையும்தான் குளம் நிறையும் வரை காத்திருந்ததிற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. எனவே இது சம்பந்தமாக பூரணமாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இதுதவிர, இரணைமடுக்குளத்தின் நீரில் 40 வீதம் வரையான நீரே விவசாயத்துக்குப் பயன்படுவதாகவும், மிகுதி 60 வீதமான நீர் கடலுக்குள் வீணே செல்வதாகவும் நீர்ப்பாசன அதிகாரிகள் தெவித்துள்ளதன் காரணமாக, அந்த மேலதிக நீரை யாழ்ப்பாண மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யப் பயன்படுத்தலாமா என்பது குறித்து ஆராயும்படி வட மாகாணத்துக்கு அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் சுரேன் ராகவன் அதிகாரிகளைப் பணித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுப்பராயன்

ஏற்கெனவே இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு சாராரும், அப்படி வழங்கினால் கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளின் விவசாயம் பாதிக்கப்படும் என்று ஒரு சாராரும் கூறி வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றிருந்தன.

இந்தக் கட்டுரையாளர் அறுபதுகள் எழுபதுகளில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாழ்ந்து அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டவர் என்ற வகையில் சில கருத்துகளைச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இரணைமடு குளம் யாருக்காக?**

பொதுவாக கிளிநொச்சிப் பிரதேசம் குடியேற்றத் திட்டங்கள் நிறைந்த பகுதியாகும். இக்குடியேற்றத் திட்டங்கள் எல்லாமே ஏதாவது ஒரு குளத்தை மையமாக வைத்தே அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டவையாகும். இவற்றில் இரணைமடு குளமே கூடுதலான குடியேற்றத் திட்டங்களைக் கொண்ட நீர்த் தேக்கமாகும்.

இரணைமடுக் குளத்தின் நீரைப் பெற்று பயன்பெறும் குடியேற்றத் திட்டங்களாக வட்டக்கச்சி, இராமநாதபுரம், முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வாய்க்கால் பகுதிகளும், உருத்திரபுரம், பரந்தன், குஞ்சுப் பரந்தன், திருவையாறு, முரசுமோட்டை, கண்டாவளை என்பனவும் திகழ்கின்றன.

இந்தக் குடியேற்றத்திட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அந்த நாட்களில் நீர்ப்பற்றாக்குறையே பெரும் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. பருவமழை பெய்யும் காலங்களில் பெரும்பாலும் மழையை நம்பியே இந்த விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டனர். ஆனால் கோடை காலத்தில் மேற்கொள்ளும் சிறுபோக நெல் வேளாண்மைக்கு இரணைமடு குள நீரை மட்டுமே நம்பி இவர்கள் விவசாயம் செய்தனர். பருவமழை பொய்த்துவிட்டால் சிறுபோகம் செய்வதற்கும் தண்ணீர் இருக்காது.

எனவே, யாழ்ப்பாணம் செயலகத்தில் – கச்சேரியில்– (அப்பொழுது கிளிநொச்சிக்கு தனி மாவட்டமோ, தனி செயலகமோ இருக்கவில்லை) இருந்த அரசாங்க அதிபர் போன்ற உயரதிகாரிகள் சிறுபோக வேளாண்மை செய்பவர்களுக்கு நீர்ப்பங்கீடு செய்வதற்கு ஒரு நயவஞ்சகமான திட்டத்தை வகுத்தனர்.

அதாவது, இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை செய்பவர்களுக்கு அவர்களிடமுள்ள காணியில் மூன்றிலொரு பங்கு காணிக்கு மட்டும் நீர் வழங்குவது எனத் தீர்மானித்தனர். இதன் மூலம் கிளிநொச்சிப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வயல்கள் வைத்திருந்த அரச உயர் அதிகாரிகள் மற்றும் பெரும் காணிச் சொந்தக்காரர்கள் பயனடைய ஏழை குடியேற்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

அது எப்படியென்றால், உதாரணமாக முன்னூறு ஏக்கர் வயல் நிலம் வைத்திருக்கும் பணக்கார விவசாயி ஒருவர் தனது மூன்றிலொரு பங்காக நூறு ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

மேற்கொள்வார். அதே நேரத்தில் சாதாரணமாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் வயல் வைத்திருக்கும் குடியேற்ற விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் கிடைக்கும்.

அந்த நாட்களில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சிறீகாந்தா, மேலதிக அரசாங்க அதிபராக இருந்த சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபராக இருந்த முருகேசம்பிள்ளை போன்றவர்களுக்கும், உடுவில் எம்.பியாக இருந்த வி.தருமலிங்கம், பளை கிராமசபை தலைவர் ஏ.ஜீ.இராஜசூரியர் போன்ற அரசியல்வாதிகளுக்கும், கிளிநொச்சியில் வட்டிக்கடைகள், மில்கள், தியேட்டர்கள் வைத்திருந்த முதலாளிகளுக்கும் கிளிநொச்சியில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வயல்கள் இருந்தன. இத்தகையவர்களே அதிகாரத்தில் இருந்துகொண்டு இரணைமடு குள நீரைப் பங்கீடு செய்ததால் இவர்களே பெரும் பயனைப் பெற்றனர்.

இந்த அநீதியான நடைமுறையை எதிர்த்து புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி பிரதேச கிளை பல போராட்டங்களை முன்னெடுத்தது.

அதன் போராட்டங்களில் ஒன்றாக, ஒருமுறை சிறுபோக தண்ணீர் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்ற போது விவசாயிகள் சங்கம் பல நூற்றுக்கணக்கான விவசாயிகளை அணிதிரட்டிச் சென்று கூட்டத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் செயலகம் சார்பாக வந்திருந்த மேலதிக அரசாங்க அதிபர் சபாரத்தினத்தை கூட்ட மண்டபத்தில் தடுத்து வைத்து தமது கோரிக்கையை நிறைவேற்றும்படி வலியுறுத்தியது.

கோரிக்கை என்னவென்றால், சிறுபோக நெற்செய்கைக்கு மூன்றிலொரு பங்கு காணிக்கு தண்ணீர் என்ற திட்டத்தைக் கைவிட்டு குடியேற்ற விவசாயிகள் என்றாலென்ன, பெரும் காணிச் சொந்தக்காரர்கள் என்றாலென்ன, எல்லோருக்கும் சம அளவாக, அதாவது தலா ஒரு ஏக்கருக்கே நீர் வழங்க வேண்டும் என்பதாகும். அரசாங்க அதிபர் கூட்டத்தை முடித்து வெளியேற முடியாமல் விவசாயிகள் தடுத்து வைத்ததால், வேறு வழியின்றி அந்தக் கோரிக்கைக்கு சம்மதிக்க வேண்டியதாயிற்று. (அதன் பின்னர் வருடாவருடம் பொலிசாரை அழைத்து வைத்துக் கொண்டுதான் யாழ்.செயலக அதிகாரிகள் தண்ணீர்க் கூட்டத்தை நடத்த வேண்டியதாயிற்று.)

இது ஒருபுறமிருக்க, 1966ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி நகருக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்ட திருவையாறு படித்த வாலிபர் திட்டத்துக்கு நீண்டகாலமாக விவசாயம் செய்வதற்கு தண்ணீர் வழங்கப்படாத நிலை இருந்தது. அந்த வாலிப விவசாயிகளும் எமது விவசாயிகள் சங்கத்தில் அங்கம் வகித்ததால் அவர்களுக்கான ஒரு போராட்டத்தை நாம் முன்னெடுத்தோம்.

அவர்களுடைய கோரிக்கையை ஆராய்வதற்கென யாழ்.செயலகத்திலிருந்து உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளை (இவர் மிகவும் சாதிவெறி பிடித்தவரும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் காலஞ்சென்ற தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மனைவியின் தகப்பனாருமாவார்) வந்திருந்தார். தமக்கு விவசாயம் செய்வதற்கு நீர் வழங்கும்படி திருவையாறு வாலிப விவசாயிகள் கடுமையாக வலியுறுத்தினர். அவர்களது கோரிக்கையை நிராகரித்த முருகேசம்பிள்ளை, ‘இரணைமடு குளம் கட்டப்பட்டது திருவையாறு வாலிப குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த சேர்.பொன்.இராமநாதனின் ஆயிரம் ஏக்கர் பண்ணைக்கு நீர் வழங்குவதற்கே ஒழிய உங்களுக்காக அல்ல’ எனத் திமிர்த்தனமாகப் பதில் அளித்துவிட்டு கூட்டத்தைவிட்டு வெளியேறினார்.

### திட்டமிட்ட அநியாயம்

இவையெல்லாவற்றையும் விட ஒரு அநியாயமான செயல் இரணைமடு குளத்தின் வரலாற்றின் பின்னால் மறைந்திருக்கிறது.

அதாவது, இரணைமடு குளத்திலிருந்து குடியேற்றத்திட்டங்களுக்கு நீர் பாய்வதற்கு இரண்டு வாய்க்கால்கள் உள்ளன. ஒன்று இடதுகரை வாய்க்கால். மற்றது வலதுகரை வாய்க்கால்.

இடதுகரை வாய்க்கால் மூலம்தான் சேர்.பொன். இராமநாதனின் 1,000 ஏக்கர் பண்ணையிலிருந்து உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் வரையான பெரும் நிலச் சொந்தக்காரர்களின் வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. இவர்களது வயல்களுக்கு போதிய நீர் பாய்ச்சப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள அற்பசொற்ப நீர் இறுதியாக உருத்திரபுரம் 10ஆம் வாய்க்காலிலுள்ள சாதாரண விவசாயிகளின் கமங்களைச் சென்றடையும்.

அதே நேரத்தில் வலதுகரை வாய்க்காலால் பாயும் நீர் வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை பிற்காலத்தில் கண்டாவளை போன்ற சாதாரண விவசாயிகளின் வயல்களைச் சென்றடையும்.

இரணைமடு குளத்தின் மூலம் பாய்ச்சப்படும் வயல்களுக்கு எப்பொழுதுமே போதிய நீர் கிடைக்காமையால், இடதுகரை வாய்க்கால் கரையிலுள்ள பெரும் காணிச் சொந்தக் காரர்களின் வயல்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, யாழ்ப்பாண மேட்டுக்குடி குழாமைச் சேர்ந்த அரச உயர் அதிகாரிகள் பிரித்தானிய காலனித்துவ அதிகாரிகளின் உதவியுடன் ஓர் சூழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி வைத்தார்கள்.

அதாவது, பெரும் காணிச் சொந்தக்காரர்களுக்கு நீர் பாயும் இடதுகரை வாய்க்கால் துருசை 6 அடிகள் பதித்து வைத்துக் கட்டினார்கள். அதன் மூலம், வலது கரையிலுள்ள சாதாரண குடியேற்ற விவசாயிகளுக்கு நீர் பாய்வது நின்ற பின்னரும், மேலதிகமாக 6 அடி வரையிலான நீர் இடதுகரையிலுள்ள பெரும் காணிச் சொந்தக் காரர்களுக்குப் பாய்ந்து கொண்டே இருக்கும். அதாவது விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் ஏழை குடியேற்ற விவசாயிகளின் வயலும் வயிறும் காய்கின்ற அதேநேரத்தில், வேறு பல வருமானங்களுடன் வயல் வருமானமும் பெறும் வலதுகரை பணக்கார விவசாயிகளின் சட்டைப் பைகள் நிறைந்து கனக்கும்.

இந்த அநியாயத்துக்கு எதிராக, இரண்டு கரை துருசுகளையும் சமாந்தரமாக்கும்படி புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி பிரதேசக் கிளை பல போராட்டங்களை முன்னெடுத்தது.

### புதிய சர்ச்சைகளும் பொய்களும்

இந்தப் பழைய வரலாறு ஒருபுறமிருக்கு, இப்பொழுது இரணைமடு தண்ணீர் சம்பந்தமாக புதிய சர்ச்சைகள் பல கிளப்பிவிடப்பட்டுள்ளன.

அதில் ஒன்று, யாழ்ப்பாண மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க இரணைமடு தண்ணீரைக் கொண்டுபோக வேண்டுமென்பதாகும். இதற்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், இரணைமடு குளத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தமக்கே நீர் பற்றாக்குறை இருக்கும்போது, எவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு குடிநீருக்காக தண்ணீரைக் கொண்டுபோக முடியும் என ஆட்சேபனை தெரிவிக்கின்றனர். அவர்களது ஆட்சேபம் முற்றிலும் நியாயமானது.

ஆனால், இந்த ஆட்சேபனையை திசைதிருப்பிவிட சில யாழ்ப்பாண மையவாத சக்திகள் முயல்கின்றன. அவர்கள் கூறுவது என்னவெனில், சில அரசியல்வாதிகளின் தூண்டுதலில்தான் யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் தர கிளிநொச்சி விவசாயிகள் மறுக்கிறார்கள் என்பதாகும். இதன் மூலம் கிளிநொச்சி விவசாயிகள் யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிரானவர்கள் என்ற பிரதேசவாத அடிப்படையிலான குற்றச்சாட்டையும் சிலர் முன் வைக்கிறார்கள். இது உண்மை அல்ல.

கிளிநொச்சி விவசாயிகள் இரணைமடு தண்ணீரை யாழ்ப்பாணம் கொண்டு போவதை எதிர்ப்பதற்கு உண்மையான காரணம் நீர் பற்றாக்குறைதான். அதல்லாமல் இங்கு யாழ்ப்பாணம் – கிளிநொச்சி என்ற பிரதேசவாதம் எதுவுமில்லை.

உண்மையைச் சொல்லப்போனால், கிளிநொச்சி குடியேற்றத் திட்டங்களில் இன்று வாழும் மக்களின் பெற்றோர்கள் அனைவரும் யாழ்ப்பாணக் கிராமங்களில் இருந்து 50கள் 60களில் குடியேறிய ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்கள்தான். அன்றைய யாழ்ப்பாணத்து நிலப்புரபுத்துவ சூழலில் அங்கு வாழ முடியாத ஏழை மக்களே கிளிநொச்சி குடியேற்றத் திட்டங்களில் குடியேறி, கொடிய காட்டு மிருகங்களையும், மலேரியா போன்ற கொடிய நோய்களையும், வெள்ளம் – வரட்சி போன்ற இயற்கை அழிவுகளையும் எதிர்த்து நின்று போராடி இன்றைய வளம் கொழிக்கும் கிளிநொச்சியை உருவாக்கியவர்கள் ஆகும். அப்படி இருக்க, அந்த யாழ்ப்பாண குடியேற்றவாசிகளின் இன்றைய தலைமுறையை யாழ்ப்பாணத்தின் எதிரிகள் என வர்ணிப்பது சுத்தமான மேட்டுக்குடி யாழ்ப்பாணிய மையவாதமாகும்.

இன்னும் சொல்லப்போனால், அன்றும் கிளிநொச்சியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களை வைத்திருந்த யாழ் மேட்டுக்குடி குழாமினரே, அதே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏழை குடியேற்ற விவசாயிகளுக்குச் சொந்தமான இரணைமடு நீரை உறிஞ்சி அனுபவித்துச் சுகித்தார்கள். இன்றும் அதே யாழ்ப்பாண குழாமினர் தமது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இரணைமடு நீரை நேரடியாக யாழ்ப்பாணம் கொண்டுபோக கங்கணம் கட்டுவது எந்தவிதத்திலும் நியாயமானதல்ல.

யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சினை பெரும்பாலும் அங்கு வாழ்கின்ற மக்களால் உருவாக்கப்பட்ட (முன்னைய காலங்களில் உருவாக்கப்பட்ட குளங்களையும் நீர்த் தேக்கங்களையும் ஆக்கிரமித்தும், நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக உறிஞ்சியும்) செயற்கையான பிரச்சினையாகும். எனவே அதைத் தீர்ப்பதற்கு முதலில் அங்குள்ள சூழல்களை வைத்துத்தான் வழி தேட வேண்டும். அதன் பின்னரே மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆராய வேண்டும்.

இரணைமடு குள நீர் சம்பந்தமாக இன்னுமொரு பொய்ப்பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. அண்மையில் கிளிநொச்சியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவர், இரணைமடு குளத்தின் நீரில் 60 வீதம்வரை வீணாகக் கடலுக்குள் செல்வதாகக் கூறி, அந்த வீணாகப் போகும் நீரை யாழ்ப்பாணத்தவர்களுக்கு வழங்கினால் என்ன என்ற கருத்தை உருவாக்க முயன்றுள்ளார். இது மிகவும் தவறான ஒரு தகவலாகும்.

உண்மையில், கிளிநொச்சி விவசாயிகளுக்கே இரணைமடு குளத்தின் நீர் பற்றாக்குறையாக இருக்கையில், ஒரு சொட்டு நீரைத்தன்னும் வீணே கடலுக்குள் செல்ல யாரும் அனுமதிப்பார்களா? உண்மை என்னவெனில், அண்மையில் பெய்தது போன்ற கனமழை பொழிகின்ற நேரங்களில் இரணைமடு குளம் உடைப்பெடுக்காமல் தடுப்பதற்காக குளத்தின் வான் கதவுகளைத் திறந்து விடுவது வழமை. அந்த நேரங்களில் கடலுக்குள் நீர் திறந்து விடுவதை வைத்துக்கொண்டு இதுதான் பொதுவான நிலைமை எனச் சொல்ல முடியுமா?

அப்படியானால் இந்த எல்லாம் படித்த பண்டிதர்களான பொறியியலாளர்கள் ஒன்று செய்ய வேண்டும். கனமழை பெய்து இரணைமடு குளம் திறந்து விடப்படுகின்ற வேளைகளில் அந்த நீரை யாழ்ப்பாணம் கொண்டு சென்று தேக்கி வைத்து பின்னர் பயன்படுத்தும் ஒரு வழிமுறையை வகுக்க வேண்டும்.

அதையும் செய்யாது, மகாவலி கங்கை போன்ற தேசிய நதிகளை வடக்கே திருப்புவதையும் எதிர்த்துக் கொண்டு, 'தமிழர்கள் எல்லோரும் சிங்களவனுக்கு எதிரான ஒன்றுபட வேண்டும்' என்றும் சொல்லிக்கொண்டு, சகோதர தமிழ் மக்களின் தண்ணீரில் கைவைத்து, அவர்களின் வயிற்றில் அடித்து, அவர்களுக்கு கண்ணீரை வரவழைப்பது என்ன நியாயம்?

உண்மையில் இரணைமடு குளத்து நீரையே நம்பி வாழும் ஏழை கிளிநொச்சி விவசாயிகளின் மடியில் கை வைப்பது, இவர்கள் சதா உரத்துச் சொல்லும் 'சிங்களப் பேரினவாதம்' தமிழ் மக்களுக்குச் செய்யும் அநீதியை விட பல மடங்கு நாசகரமான அநீதியாகும்.

# புலிகளின் ஆயுதங்கள் கிடைக்கின்றன! பணமும் நகைகளும் எங்கே?

அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுற்று (2009) 10 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல வடக்கு கிழக்கின் சில பகுதிகளில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட பல வகைத் துப்பாக்கிகள், ரவைகள், குண்டுகள், சீருடைகள் என்பன மீட்கப்பட்டு வருகின்றன.

இந்த யுத்தக் கருவிகளை படையினர் மீட்பதில் அவர்களது சாதுரியம் ஒன்றும் அடங்கியிருக்கவில்லை. இவையெல்லாம் சில 'அநாமதேய'ப் பேர்வழிகள் வழங்கும் இரகசியத் தகவல்கள் மூலமே மீட்கப்படுகின்றன. இந்த அநாமதேயப் பேர்வழிகள் வேறு யாருமல்ல, முன்னாள் புலி உறுப்பினர்கள்தான்.

அதுமாத்திரமின்றி, காணாமல் போனவர்கள் பட்டியலில் உள்ளடங்கியுள்ள புலி உறுப்பினர்களில் சிலர் இராணுவ முகாம்களில் தங்கியிருந்து இராணுவத்தின் உளவாளிகளாகச் செயற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அதே நேரத்தில் புலிகள் மறைத்து வைத்த ஆயுதங்கள்தான் பிடிபடுகின்றனவே தவிர, அவர்களிடம் இருந்த கோடிக்கணக்கான ரூபா பணமும், நகைகளும் இப்படிப் பிடிபட்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் இறுதி யுத்த நேரத்தில் வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய கணிசமான அளவு புலிகள் அவற்றைத் தம்முடன் எடுத்துச் சென்றுவிட்டார்களா அல்லது அவையும் புதைத்து வைக்கப்பட்ட இடங்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு பின்னர் மறைக்கப்பட்டு விட்டனவா என்ற கேள்வி எழுந்து நிற்கிறது.

# புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு

***1000 ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் வகையில் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளன.***

***வழமையாக இந்த கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி (பெரும்பாலும் இடதுசாரி தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய அமைப்பு) இம்முறை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. அற்கான காரணங்களை விளக்கி கூட்டுக் கமிட்டியின் செயலாளர் எஸ்.இராமநாதன் விடுத்துள்ள அறிக்கையை எமது வாசகர்களுக்காக கீழே தந்துள்ளோம்***

***-வானவில்***

**தோ**ட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து மீண்டும் புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்குச் சகல தொழிற்சங்கங்களும் ஓரணியில் திரள வேண்டும் என்று தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எஸ்.இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதால், அதில் கைச்சாத்திடவில்லை என்று தெரிவித்த அவர், முதலாளிமார் சம்மேளனம் 85வீத தொழிலாளர்களின் வயிற்றிலடித்து விட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்றாவது தொழிற்சங்கமான தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இம்முறை அதில் கைச்சாத்திடவில்லை. அதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் உள்ளதாகத் தெரிவித்த இராமநாதன், ஒப்பந்தம் கைச்சாத்திப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதிக்குள் திருத்தங்களைச் செய்த சந்தர்ப்பம் இதற்கு முன்னர் ஏற்பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, தற்போது முன்வைக்கப்படும் விமர்சனங்கள், குறைபாடுகள் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, உடன்படிக்கையை மீளப்புதுப்பிக்க வேண்டும் என்பதே தமது சங்கத்தின் நிலைப்பாடாகும் என்று தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது பற்றிக் கடந்த முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது, உடன்படிக்கையின் நகல் வரைவொன்றைச் சங்கங்களுக்கு அனுப்புவதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.



**எஸ்.இராமநாதன்**

அதன்படி, கிடைக்கப்பெற்ற உடன்படிக்கை நகலில், பல்வேறு குளறுபடிகள் காணப்பட்டதாகவும் அதனைப் பார்த்த பின்னரே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என்று முடிவு செய்ததாகவும் இராமநாதன் தெரிவித்தார்.

முக்கியமாகக் கடந்த 2018 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட வேண்டிய புதிய கூட்டு ஒப்பந்தம், 2019 ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய ஒப்பந்தம் அடுத்த இரண்டாண்டுகளும் மூன்று மாதங்களும் நீடிக்கின்றது. இதன்படி ஒக்டோபர் மாதத்திலிருந்து வழங்கப்பட வேண்டிய நிலுவைச் சம்பளம் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. மாறாக, தொழிலாளர்களுக்கு (Ex-Gratia Payment) சன்மானக் கொடுப்பனவொன்றை வழங்குவதாகப் பிறிதொரு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தது, தொழிலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவான 140 ரூபாய், வரவுக்கான கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்த 60 ரூபாய் உடன்படிக்கையில் நீக்கப்பட்டு, அந்தத் தொகையே சம்பள அதிகரிப்பாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த இராமநாதன், இது மோசமான துரோகமாகும் என்று சுட்டிக்காட்டினார்.

அடிப்படைச் சம்பளத்துடன் முன்பு வழங்கப்பட்டு வந்த 140 ரூபாய், 60 ரூபாய் எல்லாத் தொழிலாளர்களுக்கும் கிடைப்பதில்லை என்று பலமுறை முதலாளிமார் சம்மேளனத்திடம் சுட்டிக்காட்டியபோது, அதனை மறுத்துரைத்த சம்மேளனம், 85 வீதமான தொழிலாளர்கள் அந்த 200 ரூபாயைப் பெறுவதாகப் பதிலளித்தது. அவ்வாறென்றால், தற்போது அந்தத் தொகையே சம்பள அதிகரிப்பாக வழங்கப்பட்டிருக்கிறதென்றால், அஃது 85 வீத தொழிலாளர்களின் வயிற்றிலடித்தமைக்கு ஒப்பானது.

ஏனெனில், அவர்களுக்குப் புதிய ஒப்பந்தத்தால் எந்தப் பயனும் இல்லை. அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்த அதே 200 ரூபாய் தொடர்ந்தும் கிடைக்கும். உண்மையில் இது தொழிலாளர்களை அவமானப்படுத்தும் செயலாகும் என்று விசனம் தெரிவித்த இராமநாதன், தொழிலாளர்கள் தொழிலுக்கு வருவதை ஊக்குவிப்பதற்காகவே 1998 இல் வரவுக்கான ஊக்குவிப்புத் தொகை அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது தொழிலாளர்கள் பணிக்கு வந்தாலும் ஒன்று வராவிட்டாலும் ஒன்று என்ற அலட்சியப் போக்கை முதலாளிமார் சம்மேளனம் கைக்கொண்டுள்ளது. அதேநேரம், உற்பத்தி ஊக்குவிப்புத் தொகை மறுக்கப்பட்டுள்ளமையானது தோட்டங்களை நாசமாக்கும் சதித்திட்டம் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இந் நிலையில், உடன்படிக்கையை மீளப்புதுப்பிக்க சகல சங்கங்களும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

# வடக்கின் பனைசார் உற்பத்திகள் படுத்துவிடுமா?

இலங்கையின் வட பகுதியில் பனை – தெங்கு பொருட்கள் உற்பத்தியின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அண்மையில் பனை அபிவிருத்திச் சபை வெளியிட்ட ஒரு தகவலின்படி, போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுமார் 25,000 பேராக இருந்த கள் இறக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்பொழுது 6,000 ஆக, அதாவது நான்கில் ஒன்றாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தொகைக் குறைவுக்கு போரால் ஏற்பட்ட இடப்பெயர்வு, பனை — தென்னை மரங்கள் போரில் ஈடுபட்ட இருதரப்பாலும் அழிக்கப்பட்டமை, உற்பத்திகளுக்கு ஏற்ற ஊதியக் கொடுப்பனவு இல்லாமை, தெங்கு உற்பத்திப் பொருட்கள் மீதான பாவனை குறைவடைந்தமை எனப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், இந்தத் தொழில் செய்பவர்களை சமூகம் சாதி அடிப்படையில் கீழ்த்தரமாக நோக்குவதனால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை உணர்ச்சியே அந்தச் சமூகத்தின் இளைய தலைமுறையினர் தொடர்ந்தும் அந்தத் தொழிலில் ஈடுபடாமைக்கான பிரதான காரணம் எனச் சில சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

1970 இற்கு முன்னர் வட இலங்கையில் கள் இறக்கும் தொழில் 'மரவரி' என்ற முறையிலேயே நடைபெற்று வந்தது. இந்தமுறை கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு மிகவும் பாதகமாகவும், சாதி அமைப்பைப் பேணும் நிலப்பிரபுத்துவ முறையாகவும் இருந்தது.

அதாவது, யாரென்றாலும் மதுவரி இலாகாவின் அனுமதி பெற்று கள் இறக்கும் தொழிலில் ஈடுபடவும், அதனை விற்பனை செய்யவும் முடியும் என்று சட்டம் இருந்தபோதிலும், வசதி படைத்தவர்களே அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய நிலையில் இருந்தனர்.

ஏனென்றால், கள் இறக்கும் தொழிலில் ஈடுபடுவதென்றால், அதற்கு பனை — தென்னை மரங்கள் சொந்தமாக இருக்க வேண்டும் அல்லது அவற்றைக் குத்தகைக்குப் பெறுவதற்கான பண வசதி இருக்க வேண்டும். அந்த மரங்கள் முழுவதும் உயர்சாதி சமூகத்தைச் சேர்ந்த வசதி படைத்தோரிடமே இருந்ததுடன், அதைப் பெறுவதற்கான பொருளாதார வசதி கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்ட தாழ்த்தப்பட்ட மக்களிடமும் இருக்கவில்லை. அத்துடன், கள் இறக்கும் தொழிலில் ஈடுபடுவதற்கான உபகரணங்களை (பாளை சீவும் கத்தி, முட்டி, கயிறு, சுண்ணாம்பு போன்றவை) வாங்குவதற்கான பண வசதியும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருக்கவில்லை. மேலும், இறக்கிய கள்ளை விற்பனை செய்வதற்கான இட வசதியும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருக்கவில்லை.



எனவே, உயர் சமூகத்தைச் சேர்ந்த பணக்காரர்களாகவும், சண்டித்தனம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்த ஊர்ப் 'பெரிய மனிதர்கள்' சிலர் தமது பணத்தை முதலீடு செய்து, சீவல் தொழிலாளர்களின் உழைப்பை மிகவும் மலிவான கூலியில் உறிஞ்சி (சில வேளைகளில் ஊதியம் வழங்காமலே), ஆங்காங்கே கள்ளுத் தவறணைகளை நிறுவி பணம் சம்பாதித்து வந்தனர்.

என்.கிருஸ்ணன்

இதற்கு விதிவிலக்காக சில இடங்களில் சில சீவல் தொழிலாளர்கள் தாமே சொந்தமாக கள்ளுச்சீவி தமது வீடுகளில் வைத்து விற்பனை செய்த பொழுது, அங்கு கள் குடிப்பதற்காக செல்லும் ஊர் 'நயினார்மார்கள்' (ஆதிக்க உயர் சாதியினர்) கள்ளைக் குடித்துவிட்டு பணம் கொடுக்காமல் சென்றதுடன், சில சமயங்களில் அந்தச் சீவல் தொழிலாளிகளின் பெண்டுகள், பிள்ளைகள் மீது 'கைவைக்கும்' அநாகரிக — அசிங்க செயற்பாடுகளும் அரங்கேறின. ஊர்ப் பெரிய மனிதர்களின் இந்த 'சேட்டைகளை' தட்டிக் கேட்கும் தைரியம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அன்றைய சூழ்நிலையில் இருக்கவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து இழைக்கப்பட்டு வந்த இந்த அநீதிகளுக்கு எதிராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான வட இலங்கை ஐக்கிய கள்ளுத் தொழிலாளர் சங்கம் தொடர்ந்து போராடி வந்தது. அவர்களது போராட்டத்துக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது 1970 இற்குப் பின்னரே.

1970ஆம் பொதுத் தேர்தலில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜயக் கட்சி ஆகியனவும் இணைந்த மக்கள் முன்னணி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும், வட பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்துக்காக இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்தேறின.

ஒன்று, வடக்கின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அவர்களில் ஒருவராகவும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவராகவும், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராகவும் திகழ்ந்த எம்.சி.சுப்பிரமணியம் வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு நியமன உறுப்பினராக மக்கள் முன்னணி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

இரண்டாவது, மக்கள் முன்னணி அரசாங்கத்தில் நிதியமைச்சராகப் பதவி வகித்த சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா, வட பகுதி இடதுசாரிகளின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, அதுவரை காலமும் வடக்கில் கள் இறக்கும் தொழிலில் நடைமுறையில் இருந்து வந்த நிலப்பிரபுத்துவ அடிப்படையிலான மரவரி முறையை இரத்துச் செய்து, அதன் இடத்தில் கூட்டுறவு அடிப்படையிலான ஒரு முறையை அறிமுகம் செய்து

வைத்தார்.

டாக்டர் என்.எம். கொண்டு வந்த முறையின்படி, வடக்கில் ஒவ்வொரு பகுதியிலும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இந்தச் சங்கங்கள் சீவல் தொழிலாளர்கள் தெரிவு செய்யும் நிர்வாக சபையால் வழிநடத்தப்பட்டன. சங்கமே சீவல் தொழிலாளர்கள் தொழில் செய்வதற்கான பனை – தென்னை மரங்களைப் பெற்றுக் கொடுத்ததுடன், உபகரணங்கள் வாங்குவதற்காக முற்பணமும் கொடுத்தது. தொழிலாளர்கள் சீவும் முழுக் கள்ளையும் சங்கமே நியாயமான விலையில் கொள்வனவு செய்து தனது விற்பனை நிலையங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்தது. இதன் மூலம் தொழிலாளர்கள் தமது உற்பத்திக்கு நியாயமான வருவாயையும், பாவனையாளர்கள் நியாயமான விலையில் கள்ளையும் பெறக்கூடியதாக இருந்தது. தொழிலாளர்களுக்கு இரண்டு கிழமைக்கு ஒரு தடவை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்த கள்ளுக்கான பணம் வழங்கப்பட்டது.

இதுதவிர, கள்ளு தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட காலங்களில், அந்தக் கள்ளை வீணாக்காமல் பதப்படுத்தி போத்தல்களில் அடைத்து ஏனைய காலங்களில் விற்பனை செய்ததுடன், கள்ளிலிருந்து சாராயம் உற்பத்தி செய்வதற்கான சில தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. அவ்வாறு கைதடியில் நிறுவப்பட்ட பனம் சாராயத் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்த சாராயத்துக்கு இலங்கை முழுவதும் பெரும் வரவேற்பு இருந்தது.

கள் தவிர, பனம் கள்ளிலிருந்து தயாரிக்கப்படும் பதநீர் மூலம் பனங்கட்டி, பனம் கற்கண்டு என்பன செய்யும் தொழிலகங்களும் சில இடங்களில் நிறுவப்பட்டன. தவிரவும், பனை ஓலையிலிருந்து பாய், கடகம், பெட்டி, அலங்காரப் பொருட்கள் செய்யும் நிலையங்களும் நிறுவப்பட்டன.

இவ்வாறாக, ஒழுங்கமைக்கட்ட முறையில் பனையின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் தயாரித்துப் பயன்படுத்தப்பட்டன. அதன் காரணமாக, சீவல் தொழிலாளர்கள் உயர்சாதி குழாமினர் வைத்திருந்த அடிமை குடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன், அவர்களது வருவாயும் உத்தரவாதத்துடன் அதிகரிக்கப்பட்டது. அத்துடன், அவர்களது பிள்ளைகள் பலருக்கும் இந்த முயற்சிகளில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதன் காரணமாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பெறுவதற்காக அந்தச் சமூக இளைஞர் - யுவதிகளிடம் கடும் போட்டி கூட நிலவியது.

1970 — 77 காலகட்டத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் பின்பற்றிய தேசபக்த விவசாயக் கொள்கைகள் காரணமாக எவ்வாறு வட பகுதி விவசாயிகள் உச்ச பலனைப் பெற்றார்களோ, அதேபோல, அவ்வரசாங்கம் பின்பற்றிய வட பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான கொள்கைகள் காரணமாக அந்தச் சமூகமும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெரும் பலனைப் பெற்றது. இத்தகைய ஒரு பலனை வட பகுதி தாழ்த்தப்பட்ட மக்களோ அல்லது பொதுவாகத் தமிழ் மக்களோ, எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையாலோ அல்லது அவர்கள் தொடர்ந்து ஆதரித்து வரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களாலோ பெறவில்லை.

இத்தகைய ஒரு பொற்காலம் வட பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இனியும் கிட்டுமோ என்ற சந்தேக நிலை இன்று தோன்றியுள்ளது. வரலாற்றை பின்நோக்கி இழுப்பதோ அல்லது அதன் போக்கை தடுத்து நிறுத்துவதோ மனிதனால் இயலாத காரியம். இருப்பினும் 'கற்பகதரு' எனப் போற்றப்படுவதும், வடக்கு தமிழர்களின் அடையாளமாக சிலாகிக்கப்படுவதுமான பனையின் வளங்களைத் தொடர்ந்தும் பேணும், முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனெனில் இன்னமும் கூட வடக்கின் சனத்தொகையில் ஒரு கணிசமான மக்கள் இந்த பனைசார் உற்பத்திகளில் தங்கி நின்று தமது வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இன்றும் கூட வடக்கில் 19 தெங்கு பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன. இவை மூன்று கொத்தணிகளின் கீழ் உள்ளன. இவற்றை விட இத்தொழில் சம்பந்தமான சமாசம் ஒன்றும் உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்களும், அரசும் இந்த தொழிற்துறை சம்பந்தமாகவும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் சம்பந்தமாகவும் போதிய அக்கறை செலுத்தி செயற்படுவது மிகவும் அவசியமான கடமையாகும்.

# மகிந்தவின் வீட்டு திருமணத்தில் சில சிறப்பு அம்சங்கள்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கடைசி மகன் ரோஹித ராஜபக்ச இன்றைய தினம் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

அவரது நீண்டகால காதலியான டட்யான லீ என்பவரையே பெரியோர்களின் ஆசிர்வாதத்துடன் ரோஹித ராஜபக்ச திருமணம் செய்து கொண்டார்.

ராஜபக்சவின் குடும்ப கிராமமான வீரக்கெட்டியவில் ரோஹிதவின் திருமண நிகழ்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த திருமண வைபவம் வேறு அரசியல்வாதிகளின் வாரிசுகளின் திருமணம் போன்று 5 நட்சத்திர ஹோட்டல்களில் நடத்தப்படவில்லை. மிகவும் எளிமையான முறையில் வீரக்கெட்டிய கிராமத்தில் மெதமுலன வீட்டில் திருமணம் நடைபெற்று வருகிறது.

திருமணத்திற்கு வழங்கப்படும் உணவுகள் உள்ளூர் உணவுகளாகும். அயல் வீட்டவர்களினாலேயே உணவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாட்டிற்கு பகிரங்கப்படுத்தப்படாமல் மெதமுலன கிராம மக்களுக்கு மாத்திரம் திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு வருபவர்களுக்கு ரணவரா இலைகள் மற்றும் விளாம்பழம் கொண்டு தயாரிக்கப்பட்ட பானமே வழங்கப்பட்டுள்ளது. மட்பாண்டங்கள் கொண்டு இந்த திருமண உணவுகள் சமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.

இந்த திருமணத்திற்கு எவ்வித இறைச்சி வகைகளும் பயன்படுத்தாமல் இருப்பதற்கு ராஜபக்ச குடும்பத்தினர் தீர்மானித்துள்ளனர்.

திருமண அலங்கரிப்புகள் உட்பட அனைத்து அலங்கரிப்புகளும் சுற்றாடலுக்கு நெருக்கமான பொருட்கள் கொண்டே தயாரிக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த திருமண வைபவத்தில் எவ்வித மதுபானங்களும் பயன்படுத்தாமல் மிகவும் எடுத்துக்காட்டான ஒரு திருமணமாக நடத்தப்படவுள்ளது.

கடந்த ஆட்சியின் போது பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டதாக ராஜபக்ச குடும்பத்தினர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்தக் குற்றச்சாட்டின் கீழ் மஹிந்தவின் புதல்வர்களான நாமல் ராஜபக்ச, யோசித்த ராஜபக்ச சிறைக்கு சென்று வந்திருந்தனர்.

இந்நிலையில் மஹிந்தவின் கடைசி மகனான ரோகித ராஜபக்சவின் திருமணம் ஆடம்பரம் எதுவுமின்றி, மிகவும் எளிமையான முறையில் நடத்தப்படுகின்றமை நாட்டு மக்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்றி: jaffna muslim

# அரசுக்கு உபதேசம் செய்யும் ஜே.வி.பி. பரமாத்மாக்கள்!

**ரா**ஜபக்சாக்களை தண்டிப்பதன் மூலம் தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற முடியும் என அரசுக்கு உபதேசம் செய்திருக்கிறார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி.

'பன்றியோடு சேர்ந்த பசுவும் என்னவோ தின்னும்' என்ற முதுமொழிக்கு அமைவாகத்தான் ஜே.வி.பியினரின் பேச்சும் செய்கைகளும் இருந்து வருகின்றன.

முன்பெல்லாம் ஒளித்து மறைத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் கள்ளக்கூட்டு வைத்து வந்த ஜே.வி.பி., 2015 இன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போல வெளிப்படையாகவே ஐ.தே.கவுடன் இணைந்து செயல்படுகின்றனர். கடந்த வருட பிற்பகுதியில் நாட்டில் இரு மாதங்களாக ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் போது இதை வெளிப்படையாகப் பார்க்க முடிந்தது.

இந்த அரசாங்கம் 2015 இல் பொறுப்பேற்ற பின்னர் நாட்டின் மிகப்பெரிய நிதி மோசடியான மத்திய வங்கி பிணைமுறி மோசடி நடைபெற்றிருக்கிறது. அதை நடத்தி முடித்தவர் ரணிலின் கூட்டாளியும், அவரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டவருமான அர்ஜூனா மகேந்திரன். அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்பும் சிங்கப்பூரில் பகிரங்கமாக வாழும் அவரைக் கைது செய்து இலங்கைக்கு கொண்டு வந்து விசாரித்து தண்டனை வழங்காமல் ரணில் அரசு காலத்தைக் கடத்தி வருகின்றது.

அதுமாத்திரமின்றி, தற்போதைய ரணில் அரசின் அமைச்சர்கள் பலர் லஞ்சம், ஊழல் என்பனவற்றில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இவைகள் பற்றியெல்லாம் எதுவும் பேசாத ஜே.வி.பியினர் ராஜபக்சாக்களைத் தண்டிக்க வேண்டும் எனக் கூப்பாடு போடுகின்றனர்.

ராஜபக்சாக்கள் மீது இந்த அரசு பதவிக்கு வந்த நாள் முதல் ஏராளமான வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவற்றில் பல அரசியல் பழிவாங்கல் நோக்கத்துடன் பொய்யாகப் போடப்பட்டவை என்பதால் குற்றச்சாட்டுகளை இதுவரை நிரூபிக்க முடியவில்லை.

'பரிசுத்தவான்கள்' ஜே.வி.பியினர் முதலில் செய்ய வேண்டியதெல்லாம் ஆயுதக் கிளர்ச்சி என்ற பெயரில் கடந்த காலங்களில் தாம் கொன்று குவித்த ஆயிரக்கணக்கான பொதுமக்களைப் பற்றியும், நாட்டின் தேசிய சொத்துக்களான வங்கிகளில் கொள்ளையடித்த கோடிக்கணக்கான ரூபா பணம் பற்றியும் தம்மை விசாரணைக்கு உட்படுத்தட்டும். அதன் பின்னர்தான் மற்றவர்கள் பற்றிப் பேசும் தார்மீக உரிமை அவர்களுக்கு ஏற்படும்.

ஜே.வி.பியினரின் இந்த எதிர்ப் – புரட்சி நடவடிக்கைகளுக்காக, அடுத்து வரும் தேர்தல்களில் ஐ.தே.க. மக்களால் தண்டிக்கப்படும் போது ஜே.வி.பியும் சேர்த்து தண்டிக்கப்படும் என்பதை அவர்கள் நினைவில் கொண்டால் நல்லது.

# மீண்டும் தோல்வியில் முடிவடைந்த தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வுப் போராட்டம்!

**நா**ளொன்றுக்கு அடிப்படைச் சம்பளமாக 1000 ரூபா வழங்கப்பட வேண்டும் எனக் கோரி கடந்த மூன்று மாதங்களாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வந்த போராட்டம் இலக்கை எய்தாமல் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

1000 ரூபாவுக்கு பதிலாக 700 ரூபாவை நாளாந்த அடிப்படைச் சம்பளமாக வழங்குவது என தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் இடையே புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது. தொழில் அமைச்சில் நடைபெற்ற ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் இடையில் தற்போதைய ஐ.தே.க. அரசாங்கம் இடைத்தரகராக இருந்து செயல்பட்டுள்ளது.

இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வில் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு 1000 ரூபாவே போதாது. இருந்தும் அதையாவது வழங்கும்படி கோரித்தான் தொழிலாளர்கள் போராடினார்கள். அவர்களது போராட்டத்துக்கு அரசில் அங்கம் வகிக்கும் மலையகக் கட்சிகளும், அங்கம் வகிக்காத கட்சிகளும், நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரிவிப்பதாகப் பறைசாற்றின. நாடு முழுவதும் அவர்களது போராட்டத்துக்கு ஆதரவான குரல்களும் எழுந்தன. தோட்டத் தொழிலாளர்களும் மலையகத்தில் தன்னெழுச்சியான பல போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

இருந்தும் அவர்களின் போராட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. அதற்குக் காரணம் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைமைதாங்கும் தொழிற்சங்கங்களின் வர்க்க சமரசப் போக்குதான்.

முன்னைய காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கிய இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் போன்ற உறுதிமிக்க புரட்சிகர தொழிற்சங்கங்கள் இருந்தன. இன்று அந்த நிலைமை இல்லை. இன்றுள்ள பெரும்பாலான தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தினதும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தினதும் எடுபிடிகளாகவுமே உள்ளனர். அதனால் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு தோற்கடிக்கப்படுகின்றன.

இலங்கையில் நாட்டுக்கு ஆகக்கூடிய வருமானத்தை ஈட்டிக் கொடுத்துவிட்டு, மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று, கடைநிலையில் வாழும் மக்களாக மலையகத்



தோட்டத் தொழிலாளர்களே இருக்கின்றனர். அவர்கள் தமது தலைவிதியைத் தமது சொந்தக் கரங்களில் எடுத்துப் போராடாத வரை அவர்களுக்கு ஒருபோதும் விமோசனம் வரப் போவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களை மீண்டும் புரட்சிகரப் போராட்டப் பாதையில் அணி திரட்டும் பணிக்கு மலையகத்தில் வாழும் முற்போக்கு சிந்தனை கொண்ட புரட்சிகரப் புத்திஜீவிகள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.


**-வீரசிங்கம்**

# புதிய அரசியல் அமைப்பு

**இந்தத் தலைப்பில் கீழே தரப்பட்டுள்ள பகுதி இலங்கையின் முதலாவது பிராந்தியப் பத்திரிகையாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகையில் 1959 மார்ச் 14 ஆம் திகதி எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கமாகும்.**

**தற்பொழுது நாட்டில் மீண்டும் ஒரு புதிய அரசியல் அமைப்பு கொண்டு வருவதற்கான வாதப்பிரதிவாதங்கள் தலைதூக்கியுள்ள சூழ்நிலையில், சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட தலையங்கத்தை நமது வாசகர்களின் பார்வைக்காக சமர்ப்பிக்கின்றோம்.**

**-'வானவில்' ஆசிரியர் குழு**




லண்டன் "ஒப்சேர்வர்" பத்திரிகை நிருபருக்கு முதலமைச்சர் பண்டாரநாயக்கா அளித்த பேட்டியொன்றில் இப்போது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பைப்பற்றி அதிருப்தி தெரிவித்தார். இங்கு இருக்கும் சோல்பரி அரசியல் திட்டம் பிரிட்டிஸ் முறையைத் தழுவித் தயாரிக்கப்பட்டதாகும். பிரிட்டனின் இருகட்சி பார்லிமெண்ட் ஜனநாயக முறை இலங்கைக்கு ஒவ்வாதென்றும், சுவிட்ஸர்லாந்திலிருக்கும் அரசியல் முறையே இலங்கைக்கு அதிகம் ஏற்றதாகுமென்றும் முதலமைச்சர் கூறுகிறார். இதைச் சிறப்பாக இங்கு அரசியல் முறையாற் பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் ஆதரிப்பார்கள்.

சுவிட்ஸர்லாந்தின் மொத்த ஜனத்தொகை ஏறத்தாழ 50 இலட்சம். இருபத்திரண்டு "கான்டன்" (மண்டலம்) களாகப் பிரிக்கப்பட்ட அந்நாட்டில், ஒவ்வொரு மண்டலத்துக்கும் பூரண சுயாட்சி அதிகாரமுண்டு. அரசாங்க சபை, தேசிய சபை என்ற இரு சபைகளடங்கிய பார்லிமெண்டிடம் பொதுவான தேசிய அதிகாரங்களுள்ளன. ஒவ்வொரு "கன்டனும்", இரு பிரதிநிதிகளை அரசாங்க சபைக்கு அனுப்புகிறது. தேசிய சபையில் 196 பேர் அங்கம் வகிக்கின்றனர். அறுவரடங்கிய சமஸ்டிச் சபையைச் சேர்ந்தவர்கள் வருசாவருசம், மாறி மாறி சுவிட்ஸர்லாந்தின் தலைவராகத் தெரிவு செய்யப்படுகின்றார். அங்குள்ள சமஸ்டி முறையே இலங்கைக்கு வேண்டுமென்று தாம் கூறவில்லை என்றும் அங்குள்ள ஜனநாயக முறை தமக்கு மிகவும் பிடித்துள்ளதாகவும் முதலமைச்சர் பின்னர் ஒரு நிருபர் கேட்டதிற்கு விளக்கினார். "சமஸ்டி" என்றதும் இங்குச் சில வட்டாரங்களில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் கிளம்பிவிடுமாகையால், முதலமைச்சரின் இந்த 'விளக்கம்' வியப்பளிக்கத் தேவையில்லை. ஆனால் சுவிட்ஸர்லாந்திலே ஜேர்மனி, பிரெஞ்சு, இத்தாலியன், ரோமான்ஸ் என்ற நான்கு மொழிகள் பேசப்படுகின்றன. கடைசியாகக் கூறப்பட்ட ரோமான்ஸ் மொழியை நூற்றுக்கு ஒருவரே பேசினாலும், அம்மொழியும் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தஸ்து அளிக்கப்பட்டு வருகிறது. அந்நாட்டில் எல்லோரும் சரிநிகர் சமானமாக இருப்பதால்தான், அங்கு அரசியல் முறை சீராக, அமைதியாக நடந்துவர முடிகிறது. அதே போன்ற அரசியல் முறை இங்கும் ஏற்பட்டால், நிலைமை மேம்படுமென்பதில் ஐயமில்லை.

ஆனால் இதற்கென்ன வழி? இலங்கையிற் கூட்டு அரசியல் அமைப்புச் சபை நியமிக்கப்பட்டிருப்பதாயும், பல பாரதூரமான யோசனைகளையும், திருத்தங்களையும் பற்றி அச்சபை பரிசீலனை செய்து வருவதாயும், ஆனால் அச்சபை என்ன முடிவு செய்யுமென்பது தமக்குத் தெரியாதென்றும் முதலமைச்சர் கூறுகிறார். இந்தக் கூட்டு அரசியற் சபையில் இரண்டே தமிழர்கள்தாம் நியமிக்கப்பட்டனர். அதிலும் ஒருவர், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், முதலமைச்சரின் போக்குக்கு ஆட்சேபம் தெரிவித்து, அச்சபையிலிருந்து விலகிவிட்டார். இந்நிலையில் அக்கூட்டுச் சபை தங்கள் குறைகளை நீக்கி, தாங்களும் இந்நாட்டில் கண்ணியமாகச் சுதந்திரத்துடன் வாழ, வழி வகுக்குமா? என்பது பற்றித் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கையற்று இருக்கிறார்கள்.

இம்முக்கிய விசயம் நாட்டின் எதிர்காலத்தைப்பற்றியதாகும். அண்டையிலுள்ள இந்தியாவிலே, அரசியல் நிர்வாக சபையை நியமித்து அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுத்தனர். அனுபவத்திற்கேற்ப, அங்கும் புதிய திருத்தங்களைச் செய்துகொண்டு போகிறார்கள். இங்கும் அரசியல் சீராக நடந்து நாடு அரசியல் அமைதி பெற்று முன்னேற வேண்டுமாயின், இந்நாட்டில் வாழும் எல்லாச் சமூகங்களின் அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் பெறக்கூடியதாக அரசியல் திட்டத்தைத்

திருத்தி அமைக்க வேண்டும். கேவலம் பெரும்பான்மைப் பலத்தால், மற்ற சமூகங்களை நசுக்கி விடாமல், எல்லாருடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் மதித்து அதற்கான முறையில் அரசியலை வகுக்க வேண்டும்.

அரசியற் சபையின் அமைப்பு எவ்வளவு அதிருப்தியானதாக இருப்பினும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் அபிலாசைகளை அதனிடம் தெரிவிக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தை அவர்கள் இழக்கக்கூடாது. எப்படியும், எல்லா மக்களின் உரிமைகளையும் சமமாக மதிக்கும் சுவிட்சர்லாந்தின் அரசியலைப் போற்றும் முதல் அமைச்சர் பண்டாரநாயக்கா, அதே அடிப்படையை இங்கு பின்பற்றத் தவறக்கூடாது. சமீப அனுபவங்களால், பழைய அரசியல் தவறுகளைத் திருத்திக் கொண்டு நாட்டுக்கு நல்ல அரசியல் திட்டத்தை வகுக்க அவருக்கும் இது நல்ல சந்தர்ப்பமாகும்.
**–ஈழநாடு, 1959 மார்ச் 14, ஆசிரிய தலையங்கம்**

**'வானவில்' தரும் பிற்குறிப்பு:**

மேலே தரப்பட்டுள்ள 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் மூலம் இரண்டு விடயங்கள் புலனாகின்றன.

ஒன்று, திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கதான் இலங்கைக்கு ஒரு சமஸ்டி அடிப்படையிலான அரசியல் அமைப்பு தேவை என்ற கருத்தை 1920 களிலேயே முன் வைத்தவர். இந்த தலையங்கத்தின்படி, சுமார் 30 வருடங்கள் கழித்தும், அதாவது 1959 இலும் அதே கருத்தையே பண்டாரநாயக்க கொண்டிருந்திருக்கிறார் என்பது புலனாகின்றது. (இந்த ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்ட ஆறு மாதங்களின் பின்னர்தான், 1959 செப்ரெம்பர் 26 ஆம் திகதி பௌத்த மதகுரு வேடம் தரித்து வந்த பிற்போக்கு சக்திகளின் கையாள் ஒருவனால் பண்டாரநாயக்க தனது கொழும்பு இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

அதன் காரணமாகத்தான் அவர் 1956 இல் பதவிக்கு வந்ததும் தமிழரசுக் கட்சி தலைவர் செல்வநாயகத்தை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, 1957 இல் பண்டா – செல்வா ஒப்பந்தம் என்ற பெயரில் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக வடக்கு கிழக்கில் பிராந்திய சபைகள் அமைக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார்.

அதை ஏற்காத ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் 'கண்டி யாத்திரை' மேற்கொண்டு அவ்வொப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சி பண்டாரநாயக்கவுக்கு கைகொடுப்பதற்கு பதிலாக வடக்கு கிழக்கில் தேவையில்லாத சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி, சிங்கள இனவாதிகளின் கையை ஓங்கச் செய்து பண்டாரநாயக்கவை கையறு நிலைக்குத் தள்ளியது.

ஆனால், பண்டாரநாயக்க அரசாங்கம் மிகவும் தவறுதலாக மேற்கொண்ட 'சிங்களம் மட்டும்' சட்டத்தை வைத்துக்கொண்டு அவரை இலங்கையின் மிக மோசமான சிங்கள இனவாதியாக சித்தரிக்கும் தமிழ் தலைமைகள், பண்டாரநாயக்க தான் சமஸ்டி கொள்கையின் பிதாமகர் என்பதையோ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான் தனிச் சிங்களக் கொள்கையின் முன்னோடி என்பதையோ திட்டமிட்டு மறைத்து வருகிறார்கள்.

அடுத்தது, இந்தத் தலையங்கத்தின்படி, அன்றும் தமிழரசுக் கட்சி தலைவர் செல்வநாயகம், பண்டாரநாயக்கவின் ஏதோ ஒரு பேச்சைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரசியல் அமைப்புச் சபையிலிருந்து விலகியிருக்கிறார் எனத் தெரிய வருகிறது. அன்று மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியின் இந்த ஏமாற்று இரட்டை அரசியல் இன்றுவரை தொடர்கதையாகத் தொடர்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1987 இல் இந்திய ~ இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட தீர்வையும் இதே தமிழ்த் தலைமைதான் எதிர்த்தது. பின்னர் சந்திரிகவின் ஆட்சிக் காலத்தில் 2000 ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்வுப்பொதியையும் ஐ.தே.கவுடன் சேர்ந்து இதே தமிழ்த் தலைமைதான் எதிர்த்தது. பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக கூட்டப்பட்ட சர்வகட்சி கூட்டத்திலும் ஒத்துழைக்காமல் இதே தமிழ்த் தலைமைதான் முரண்டு பிடித்தது.

இப்பொழுது மட்டும் தமது அரசியல் சகபாடியான ஐ.தே.க. அரசாங்கம் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன், சம்பந்தன் போன்றோர் தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றி வருகின்றனர். புதிய அரசியல் அமைப்பு ஒன்று வருவதற்கான சாத்தியமில்லை, அப்படி வந்தாலும் அதன் மூலம் இனப்பிரச்சினை தீராது என்பதை நன்கு அறிந்து கொண்டுதான் இவர்கள் இருவரும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் மேலே தரப்பட்டுள்ள 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கதின் பகைப்புலத்தில் தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சியான ஏமாற்று அரசியலையும், துரோகங்களையும் எமது வாசகர்கள் புரிந்திருப்பார்கள் என நம்புகின்றோம்.

**–ஆசிரியர் குழு**

# கனடா அமெரிக்காவுக்கு வழங்கிய தகவல்கள்!

கனடிய அரசாங்கம் சுமார் 1.6 மில்லியன் கனடிய வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்களை அமெரிக்காவின் உள்நாட்டு இறைவரி சேவைக்கு ( US Internal Revenue Service) வழங்கியுள்ளதாக கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CBC) தெரிவித்திருக்கிறது. 2014 இல் இரண்டு நாடுகளும் செய்து கொண்ட தகவல் பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கனடிய அரசாங்கம் இத்தகவல்களை அமெரிக்காவுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் 2014 இல் 150,000, 2015 இல் 300,000, 2016 மறறும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 600,000 என கனடிய அரசால் அமெரிக்காவுக்கு வங்கிக் கணக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களில் கனடிய வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர், அவர்களின் முகவரி, கணக்கு இலக்கம், மீதமுள்ள கணக்கு விபரம்,கொடுப்பனவுகள், வைப்புகள், வட்டிக் கொடுப்பனவு போன்ற தகவல்கள் கனடாவால் அமெரிக்காவுக்கு பரிமாறப்பட்டுள்ளன.

## ‘டெயிலி மிரர்’ ஆசிரிய தலையங்கம்:

# வெனிசூலா நெருக்கடியும் லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க தலையீடும்

**வெ**னிசூலா இன்று அரசியல், பொருளாதார, மனிதாபிமான நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. அந்நாட்டின் மூன்று மில்லியன் மக்கள், அதாவது சனத்தொகையில் பத்தில் ஒரு பங்கினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக ‘கார்டியன்’ பத்திரிகை தெரிவிக்கிறது. அதன் பொருளாதாரம் வேகமாகச் சரிந்து வருவதுடன், அதன் பணவீக்கம் இந்த வருடம் *10,000,000* வீதத்தை எட்டும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறுகின்றது. பரவலாக ஏற்பட்டுள்ள உணவு மற்றும் மருந்து தட்டுப்பாடு காரணமாக போசாக்கின்மை அதிகரிப்பதுடன், மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளது.




வெனிசூலாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் வேண்டுகோள், அது லத்தீன் அமெரிக்காவில் நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் திட்டமிட்ட செயற்பாடுகளின் ஒரு பிந்திய உதாரணம் மட்டுமே. அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள், இடையூறுகள் வெனிசூலா நெருக்கடியை மேலும் அதிகரித்துள்ளது. அமெரிக்கா ஏற்கெனவே வெனிசூலா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதுடன், “வெனிசூலா மக்களின் சார்பாக” என்று கூறிக்கொண்டு அந்நாட்டின் 7 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துகளையும் முடக்கி வைத்துள்ளது. ஜனாதிபதி மதுரோவைத் (Maduro) தூக்கி எறிந்துவிட்டு அவரது இடத்துக்கு வெனிசூலாவின் எதிர்க்கட்சித் தலைவர் ஜூவான் குய்டோவை (Juan Guaido) ஜனாதிபதியாக நியமிக்குமாறு அமெரிக்கா வெனிசூலா இராணுவத்தை கேட்டுக் கொண்டுள்ளது. இன்று, அமெரிக்கா மீண்டுமொரு சதியை வெனிசூலாவில் நடைமுறைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நடவடிக்கைகள், அங்கு மேலும் அமெரிக்கத் தலையீடுகள் அதிகரிக்கலாம் என்ற வாதத்தை நிராகரிக்க முடியாது செய்துள்ளது. லத்தீன் அமெரிக்காவில் ஆட்சி மாற்றங்களில் அமெரிக்க தலையீடு என்பது ஒரு புதிய விடயமல்ல. உதாரணமாக, *1976* இல் ஆர்ஜன்ரீனாவில் ஜனநாயகரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட இஸபெல் பெரோனை (Isabel Peron) ஐ தூக்கியெறிந்துவிட்டு, ஜெனரல் ஜோர்ஜ் ரபேல் விடெல்லாவை (Jorge Rafael Videla) ஐ அதிகாரத்துக்கு கொண்டு வந்த வலதுசாரி சதிக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. புதிய ஆட்சியை அமெரிக்காவின் அப்போதைய இராஜாங்க செயலாளர் ஹென்றி கீசிங்கர் மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன், ஆர்ஜன்ரீனாவில் சர்வாதிகார ஆட்சி நிலவிய காலத்தில் அவர் பல தடவைகள் அங்கு உத்தியோகபூர்வ விஜயங்களையும் மேற்கொண்டார்.

ஆர்ஜன்ரீனாவில் சதி அரங்கேறிய பின்னர் *30,000* பேர் அங்கு காணாமல் போயினர். இந்தக் காலகட்டத்தில், சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், பெருமெடுப்பிலான படுகொலைகள், சித்திரவதை, பாலியல் பலாத்காரம், அரசியல் கைதிகள் மற்றும் எதிர்ப்பாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை, பிறந்த பிள்ளைகள் புதிய இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டமை (இவர்களின் தாய்மார்கள் சிறை வைக்கப்படுவதற்கு முன்னர் கர்ப்பமாக இருந்தவர்கள் அல்லது சிறை வைக்கப்பட்ட பின்னர் தொடர் பாலியல் பலாத்காரத்தால் கர்ப்பமானவர்கள்) என ஏராளமான மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டன. ஸ்பானிய நீதிபதி போல்ரஸார் கார்சன் (Baltazar Garzon) அவர்களின் கூற்றுப்படி இந்தக் குற்றங்களுக்கு கீசிங்கர் சாட்சியாவார்.

‘பிரேசில் இன்னொரு கியூபாவாக வரக்கூடாது!’ என்ற அப்போதைய அமெரிக்க அதிபர் கெனடியின் விருப்பத்துக்காக *1964* இல் அந்நாட்டின் மத்திய இடது சமூக ஜனநாயகவாதி ஜோஆஓ கௌலாட் (Joao Goulart) அவர்களின் ஆட்சிக்கு எதிரான சதிக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. *1970* இல் சிலியில் ஜனநாயகத் தேர்தல் மூலம் பதவிக்கு வந்த இடதுசாரி சார்பான ஜனாதிபதி சல்வடோர் அலன்டே (Salvador Allende) அவர்களின் அரசுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் சிலி அரசாங்கத்துக்கு எதிராக வேறு பல விடயங்கள் உட்பட பொருளாதார யுத்தமொன்றைத் தொடுத்ததுடன், *1973* இல் அந்த நாட்டில் இராணுவச் சதியையும் அமெரிக்கா நடத்தியது. அதன் பின்னர் *1990* மார்ச் வரை அங்கு அமெரிக்க ஆதரவுடனான ஜெனரல் ஒகஸ்ரோ பினோசெட்டின் (Augusto Pinochet) இராணுவ சர்வாதிகார ஆட்சி ஒரு தசாப்தகாலத்துக்கு நடைபெற்றது.

*1993* இல் பினோசெட்டின் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின், அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிப்பதற்காக உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, அரசியல் கைதிகள் மற்றும் சித்திரவதைகள் பற்றிய தேசிய ஆணைக்குழு என்பன அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொண்ட பொழுது, *30,000* பேர் வரை மனித உரிமை

மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர்களில் 27,255 பேர் சித்திவரைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், 2,279 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வந்தது. மேலதிகமாக, சுமார் 200,000 பேர்வரை வெளிநாடுகளுக்குத் தப்பியோடி அவலப்பட்டதாகவும், கணக்கிட முடியாத தொகையினர் சட்டவிரோத முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிய வந்தது. 20 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் ஆட்சி மாற்ற செயல் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகள் பின்வருமாறு:

கோஸ்ரா றிக்கா, எல் சல்வடோர், கௌதமாலா, நிக்கரக்குவா, பனாமா, பராகுவே, பெரு, கொண்டுராஸ், உருகுவே.

ஜோன் கோட்ஸ்வேர்த் (John Coatsworth) எழுதிய 'ReVista' – லத்தீன் அமெரிக்கா பற்றிய ஹாவர்ட் பார்வை தந்துள்ள தகவலின்படி,

"அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா இரண்டினதும் பொருளாதார நலன்களைப் பார்க்குமிடத்து, அமெரிக்கத் தலையீடுகளுக்கு கீழ்ப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. இது வேறுபட்ட அனுமானமாகும். ஒன்று ஊழலை எடுத்துக்கூற, மற்றது முதலாளித்துவத்தை குற்றஞ்சாட்டும். ஊழல் பற்றிய அனுமானங்கள் அமெரிக்கா கோப்பரேசன்களைப் பாதுகாப்பதற்காக தலையீடுகளை மேற்கொள்ளும்படி அமெரிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடும். இதற்கு சிறந்த ஆதாரம் 1954 இல் கௌதமாலாவில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை நீக்க எடுத்த முடிவாகும். அந்த நாட்டு அரசாங்கம் எடுத்த விவசாய சீர்திருத்த நடவடிக்கைகளாலும், ஏனைய கொள்கைகளாலும், ஜனாதிபதி ஐசனோவரைத் தவிர்த்து ஏனைய கொள்கை வகுப்பாளர்களினதும் குடும்பம், வர்த்தகம், தொழில்வாண்மை என்பன அவர்கள் சம்பந்தப்பட்டிருந்த ஐக்கிய பழங்கள் நிறுவனத்தை (United Fruit Company) பாதித்ததே இதற்குக் காரணம். ஒவ்வொரு அமெரிக்கத் தலையீட்டுக்கும் இந்த கோப்பரேட் நலன்களே காரணம்"

வெனிசூலாவின் விடயத்தைப் பொறுத்தவரையில் கதை வித்தியாசமானது. இந்த நாட்டில் மிகப்பெரிய எண்ணெய் வளம் உள்ளது. ரஸ்யாவும் சீனாவும் அந்த நாட்டில் மிகப்பெரிய அளவில் முதலீடுகளைச் செய்துள்ளன. ரஸ்யா மதுரோவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக கடந்த மாதம் இரண்டு குண்டுவீச்சு விமானங்களை வெனிசூலாவுக்கு அனுப்பியதுடன், அமெரிக்காவின் நடவடிக்கைகள் "பாரதூரமான விளைவுகளை உருவாக்கும்" எனவும் எச்சரித்துள்ளது. சீனா, துருக்கி, மெக்சிக்கோ என்பன மதுரோவின் பக்கம் நிற்கின்றன. அடுத்தது என்ன என்பதுதான் கேள்வியாகும். ரஸ்யா, சீனா, அமெரிக்கா என்பனவற்றுக்கு இடையே வெனிசூலாவில் ஒரு இராணுவ மோதல் நிகழக்கூடிய சாத்தியக்கூறு நிதர்சனமானது. பேச்சுவார்த்தை மூலமான தீர்வே தேவையானது. அது தவிர்ந்த எதுவும் அச்சத்துக்குரியது.

நன்றி: 'டெய்லி மிரர்' (ஆசிரியர் தலையங்கம்)

# "இரணைமடுக்குளம் ஏழை விவசாயிகளுக்கே சொந்தமாக வேண்டும்"

## வட்டக்கச்சி கூட்டத்தில் கம்பஹா எம்.பி. எஸ்.டி.பண்டாரநாயக்கா

**இரணைமடுகுள நீர் விநியோகத்தில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாழும் குடியேற்ற விவசாயிகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக்கோரி புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி பிரதேசக் கிளை 1960 களில் நடத்தி வந்த போராட்டத்தின் போது கிளிநொச்சிக்கு வருகை தந்த அப்போதைய கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்கா, வட்டக்கச்சியில் விவசாயிகள் சம்மேளனம் ஒழுங்கு செய்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பேச்சை அக்கட்சியின் வார ஏடான 'தொழிலாளி' பத்திரிகை தனது 1968 யூலை 9ஆம் திகதிய பதிப்பில் பிரசுரித்திருந்தது. அதன் ஒரு பகுதியைக் கீழே தந்திருக்கிறோம். அவரது பேச்சின் மூலம் இரணைமடுத் தண்ணீருக்காக சாதாரண விவசாயிகளுக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் இடையிலான போராட்டம் எவ்வளவு நீண்ட காலமாகவும் ஆழமாகவும் நடந்து வந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.**



"ஆயிரக்கணக்கான குடியேற்ற விவசாயிகள் ஆளுக்கு ஒன்றேகால் ஏக்கர் விதைக்கும் அதேவேளையில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில பணக்காரர்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர்களை விதைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமின்றி குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்ட ஒன்றேகால் ஏக்கரும் இன்று நீர் இடையில் இல்லாமல் போவதால் அழிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இரணைமடுக்குளத்தின் தண்ணீரைப் பாகுபாடு செய்யும் அதிகாரம் ஒருசில பெரும் நிலச் சொந்தக்காரர்களான உயர் அதிகாரிகளின் கையில் இருப்பதே இத்தகைய கொடுமைகளுக்குக் காரணமாகும். ஆகவே இரணைமடுக்குளத்து நீரை பாகுபாடு செய்யும் அதிகாரம் என்று ஏழைகள் கைக்கு வருகிறதோ அன்றுதான் விமோசனப் பாதை திறக்கும்" என்று அண்மையில் வட்டக்கச்சியில் நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் கம்பஹா எம்.பி. தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்கா பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது: "கிளிநொச்சிப் பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களுக்குள் ஐக்கியப்படுவது மட்டுமின்றி, இலங்கை முழுவதிலும் உள்ள ஏனைய விவசாயிகளுடனும் ஐக்கியப்படுவதின் மூலமே எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான பாதையில் முன்செல்ல முடியும்".

**முன்பக்கத் தொடர்ச்சி...**

மாகாண சபையின் செயற்பாட்டை குழப்ப முயன்றதுடன், ஒப்பந்தம் அமுல்படுத்துவதை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு உத்தரவாதப் படுத்துவதற்காக இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையுடனும் ஒரு வலிந்த யுத்தத்தை ஆரம்பித்தனர்.

அதேநேரத்தில், சிங்கள பேரினவாத சக்திகளில் ஒரு பிரிவினரான ஜே.வி.பி. இயக்கமும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஆயுத ரீதியிலான வன்முறையில் இறங்கி தென்னிலங்கையில் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்த பல்லாயிரக்காணவர்களைப் படுகொலை செய்தது.

இந்த சூழ்நிலையில் 1990 இல் ஜே.ஆருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆர்.பிரேமதாச, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக நிராகரித்ததுடன், புலிகளின் வேண்டுகோளை ஏற்று வடக்கு – கிழக்கு மாகாண சபையையும் கலைத்ததுடன், இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போரிடுவதற்காக புலிகளுக்கு ஆயுதங்களும், பணமும், இதர வசதிகளும் செய்து கொடுத்தார். இதன் உச்சகட்டமாக பிரேமதாச இறுதியில் இந்திய அமைதிப்படையை நாட்டைவிட்டும் வெளியேற்றினார்.

புலிகள் இத்துடன் திருப்பியடையவில்லை. இந்தியாவில் வைத்து, அதுவும் தமிழ்நாட்டில் வைத்து ராஜீவ் காந்தியை தமது தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை செய்தனர். பின்னர் அதேபோல தமக்கு உதவி செய்த ஆர்.பிரேமதாசவையும் தற்கொலைக் குண்டுதாரி மூலம் படுகொலை செய்தனர்.

இருந்தும் 1994 இல் சந்திரிக குமாரதுங்க இலங்கையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மாகாண சபைகளை திரும்பவும் இயங்க வைத்தார். ஆனால் புலிகள் வடக்கு கிழக்கை தமது கட்டுப்பாட்டில் வைத்து அரசுடன் போர் புரிந்து வந்ததால், அம்மாகாண சபை இயங்க முடியவில்லை. ஏனைய ஏழு மாகாண சபைகளும் தங்குதடையின்றி இயங்கி வந்தன.

பின்னர் சிங்கள இனவாத சக்திகள் சில தாக்கல் செய்த வழக்கு காரணமாக, இந்திய – இலங்கை உடன்பாட்டின் மூலம் தற்காலிகமாக ஒன்றிணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாண சபை தனித்தனி சபைகளாகப் பிரிக்கப்பட்டன.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தி அதை வெற்றிகரமாக இயங்க வைத்தார். பின்னர் 2009 இல் போர் முடிவுக்கு வந்ததும் வடக்கு மாகாண சபைக்கும் தேர்தல் நடத்தி அதையும் முதன்முதலாக இயங்க வைத்தார்.

சிங்களத் தரப்பில் இந்த மாகாண சபை முறைமைக்கு சில பேரினவாத சக்திகள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வந்த சூழ்நிலையில் தமிழர் தரப்பின் நிலை என்னவாக இருந்தது என்பதையும் பார்ப்பது அவசியமானது.

புலிகள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த அதேநேரத்தில், தனிநாட்டுக்கான போரில் ஈடுபட்டு வந்த ஏனைய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஒப்பந்தத்தை ஏற்று ஜனநாயக வழியிலான நாடாளுமன்ற அரசியலுக்குத் திரும்பின. மறுபக்கத்தில் அகிம்சை பேசிக்கொண்டு இந்த ஆயுதப் போராட்டத்தைத் தூண்டிவிட்ட சூத்திரதாரியாக இருந்த அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒப்பந்தத்தை ஆதரித்தது. அதன் காரணமாக புலிகள் அ.அமிர்தலிங்கத்தையும், அவரது இன்னொரு சகாவான யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனையும் சுட்டுப் படுகொலை செய்தனர்.

இருந்தும் தமிழர் விடுதலை கூட்டணி சந்திரிக காலத்தில் 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதியை ஆதரித்தது. அந்த நேரத்திலும் இந்த தீர்வுப்பொதியைத் தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் என்று கருதப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தை புலிகள் தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை செய்தனர். அதன் பின்னர் அந்தத் தீர்வுப்பொதி நாடாளுமன்றத்துக்கு வந்த நேரம் புலிகளின் உத்தரவுக்கிணங்க தமிழர் விடுதலைக் கூட்டணி சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐ.தே.கவுடனும், ஜே.வி.பியுடனும் இணைந்து அதற்கு எதிராக வாக்களித்து அதைத் தோற்கடித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உள் முரண்பாடுகளால் செயலிழந்து போன பின்னர், புலிகள் தமது தேவைகள் சிலவற்றை நிறைவேற்றும் நோக்குடன் தமிழரசுக் கட்சி தலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இரா.சம்பந்தன் தலைமையிலான இந்த அமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்ததுடன், மாகாண சபை முறைமையையும் நிராகரித்து வந்தது.

ஆரம்பத்தில் 1948 இல் கட்சி உருவான காலம் முதல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சமஸ்டி கோரி வந்த தமிழரசுக் கட்சி, பின்னர் 1986 இல் தனிநாடு கோரி தீர்மானம் நிறைவேற்றியது. பின்னர் 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்து மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்டது. பின்னர் புலிகளின் பயமுறுத்தல் காரணமாக அதைக் கைவிட்டது. ஆனாலும் புலிகள் 2009 இல் அழிக்கப்பட்ட பின்னரும் சம்பந்தன் சில சந்தர்ப்பங்களில் மாகாண சபை முறை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்று கூறி வந்துள்ளார். அதன் மூலம் கிடைத்த ஒரேயொரு தீர்வையும் கூட இல்லாமல் செய்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை கங்கணம் கட்டி வந்தது தெளிவானது.

அதேநேரத்தில் 2015 இல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு விருப்பமான ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும், இரு தரப்பினரதும் அந்நிய சக்திகளின் ஆலோசனைக்கிணங்க ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் சம்பந்தன் கூறத் தொடங்கினார்.

அப்படியானால் அவர் கூறும் தீர்வுதான் என்ன? ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி முன்வைத்த சமஸ்டியா? ஆனால் அவரது நெருங்கிய சகபாடி எம்.ஏ.சுமந்திரன் தாம் சமஸ்டி அமைப்பொன்றைக் கோரவில்லை என்றும் கூறுகின்றார். அப்படியானால் கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வு என்ன? ஏன் அதைப் பகிரங்கப்படுத்தாமல் ஒளிவுமறைவாக வைத்திருக்கின்றனர்?

இந்தச் சூழ்நிலையில் வட மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம் என்பனவற்றின் ஆயுள் காலம் முடிவடைந்து ஒன்றரை வருடங்களாகியும் அவற்றுக்கு தேர்தல் நடத்தாமல் ஐ.தே.க. அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது. அதன் பின்னர் வட மாகாணம் உட்பட மேலும் சில மாகாண சபைகளின் ஆயட்காலமும் முடிவடைந்துவிட்டது. அவற்றைப் பற்றியும் அரசாங்கம் கவலைப்படவில்லை.

முடிவடைந்த மாகாண சபைகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் பல தடவை வலியுறுத்தியும் ரணிலின் அரசாங்கம் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் மக்களின் வேண்டுகோளை மட்டுமின்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட

ஜனாதிபதியின் வேண்டுகோளையும் ஐ.தே.க. அரசாங்கம் உதாசீனம் செய்கிறது.

மாகாண சபை முறை விசேடமாக தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக கொண்டு வரப்பட்டது என்ற ரீதியில் அவற்றுக்கான தேர்தல்களை உடன் நடத்தும்படி கோர வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரியதே. ஆனால் கூட்டமைப்பு எதிர்க்கட்சியில் இருந்தபோதும் அந்தக் கோரிக்கையை முன் வைக்கவில்லை, இப்பொழுதும் வைக்கவில்லை. பதிலாக, தேர்தல் தோல்விப் பயத்தில் மாகாண சபைகளின் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வரும் ஐ.தேக. அரசைப் பாதுகாப்பதில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

ஏற்கெனவே இருக்கும் அதிகாரப் பகிர்வு அலகான மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் ஐ.தே.க. அரசும், அதற்கு ஒத்துழைக்கும் தமிழ் கூட்டமைப்பும், புதிய அரசியல் அமைப்பு ஒன்று வந்து தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் என மக்களை நம்ப வைக்க முயல்கின்றனர். புதிய அரசியல் அமைப்பு ஒன்று வரப்போவதில்லை என்பதும், அதன் மூலம் இனப் பிரச்சினை தீரப்போவதில்லை என்பதும் சிறு பிள்ளைக்குக்கூடத் தெரிந்த விடயம்.

உண்மை என்னவெனில், பல குறைபாடுகள் இருந்தபோதும், நடைமுறையில் இருக்கின்ற மாகாண சபை முறைமையையும் இல்லாமல் செய்து, முற்றுமுழுதான ஒற்றையாட்சி முறையையே நடைமுறைப்புடுத்த வேண்டும் என்பதுதான் ஐ.தே.கவினதும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் திட்டம். ஏனெனில் இலங்கையின் வரலாற்றில் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளையும் ஐதே.கதான் குழப்பி வந்திருக்கிறது. அவர்களது திட்டத்துக்கு உடந்தையாகத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ‘மாகாண சபை முறை தமிழர்களுக்கான தீர்வு அல்ல’ என்ற போர்வையில் மாகாண சபை முறைமையை நிராகரித்து வருகின்றது.

இந்த இரு பகுதியினரதும் நோக்கம் என்ன என்பது விளங்கிக்கொள்ள முடியாதது அல்ல. தமிழர்களை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் சிங்கள பேரினவாதக் கட்சியான ஐ.தே.கவின் நோக்கம். இனப் பிரச்சினை தீர்ந்து போகாது ‘பிச்சைக்காரனின் புண்’ணாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். எனவே இருவரதும் நோக்கங்கள் ஒரே நேர்கோட்டில் பயணிக்கின்றன.

எப்பொழுதும் ஏமாளிகளாக இருககின்ற தமிழ் மக்கள்தான் தாம் எந்தக் கோட்டில் (பாதையில்) பயணிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

# ‘சேனைப் புழு’ இலங்கைக்கு எவ்வாறு வந்தது?

**இ**லங்கையில் புதிதாக உருவாகியுள்ள ‘சேனைப்புழு’ என்றொரு புழு சோளப்பயிர் உட்பட பலவிதமான பயிர்களையும் பெரும் எடுப்பில் நாசமாக்கி வருகின்றது. இதை ஒரு தேசிய அபாயம் என்று சொல்லுமளவுக்கு அதன் தாக்கம் உள்ளது.

இந்தப் புழுவை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆனால் ஆட்சியில் உள்ள அரசாங்கம் இந்த பாரதூரமான விடயம் குறித்து போதிய அக்கறை எடுத்துச் செயல்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நாசகாரப் புழு திடீரென நாட்டுக்குள் எப்படித் தோன்றியது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனாலும் அது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நடக்கின்றன.

இந்த புழுவின் வருகை பற்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய விவசாய அமைச்சர் ஹரிசன், இந்தப் புழு தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காற்றின் மூலம் பங்களாதேசிலிருந்தும் தாய்வானிலிருந்தும் பறந்து இலங்கைக்கு வந்ததாகத் தெரிவித்தார். இதை மறுத்த ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இந்தப் புழு நாட்டுக்குள் இறக்குமதி செய்த சோள விதைகளுடன்தான் வந்து சேர்ந்தது என்று குறிப்பிட்டதுடன், அதை மறைக்கவே அமைச்சர் வேறு விதமான கதைகளைக் கூறுகிறார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

அமைச்சர் கூறுவது போல இந்தப் புழு பங்களாதேசிலிருந்து பறந்து வந்திருந்தால், முதலில் அருகிலுள்ள இந்தியா, நேபாளம், பூட்டான், சிக்கிம் போன்ற நாடுகளைத் தாக்கியிருக்க வேண்டும். அதே போல தாய்வானிலிருந்து பறந்து வந்திருந்தால் முதலில் சீனாவைத் தாக்கியிருக்கு வேண்டும். அப்படி அந்த நாடுகளை இந்தப் புழு தாக்கியதாகத் தெரியவில்லை. எனவே உண்மையில் எங்கிருந்து இந்தப் புழுக்கள் உற்பத்தியாயின என்பது கண்டறியப்பட வேண்டும்.

ஏனெனில், கடந்த காலங்களில் இலங்கை உட்பட பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பலப்பல புதுவிதமான நோய்கள் பயிர்களைத் தாக்கி அழித்திருக்கின்றன. பின்னர் ஆராய்ந்து பார்த்ததில், இந்த பயிர்களை அழிக்கும் நோய்க் கிருமிகளை உரம் மற்றும் கிருமி நாசினிகளைத் தயாரிக்கும் பல்தேசியக் கம்பனிகளே தயாரித்து திட்டமிட்டு வளர்முக நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றன என்பது தெரிய வந்தது. அந்தக் கம்பனிகளில் பல பெரும் பண்ணைகளை நடத்தி அதில் விளையும் உணவுப் பொருட்களை வளர்முக நாடுகளுக்க ஏற்றுமதி செய்வன என்பதும் தெரிய வந்தது.

எனவே இந்த சேனைப் புழு விடயத்திலும் அரசாங்கம் தீர ஆராய வேண்டும். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை தானியங்கள், உரம், கிருமிநாசினி, மரக்கறிகள், பழங்கள், மாமிச வகைகள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய சேனைப் புழுத் தாக்கத்தை ஜனாதிபதியோ அரசாங்கமோ அதிகாரிகளுக்கு உத்தரவு போடுவதன் மூலம் மட்டும் ஒழித்துககட்டிவிட முடியாது. மக்களைத் திரட்டி ஒரு பரந்த வெகுஜன இயக்கமாக முன்னெடுப்பதன் மூலமே எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முடியும்.

# சுமந்திரன் மனதைத் திறந்து நிறத்தைக் காட்டினார்!

‘அரசியல் விற்பன்னர்’ எம்.ஏ.சுமந்திரன் இலங்கையின் அரசியல் அரங்கில் திடீர் திடீர் என சில சரவெடிகளை வீசி வருகிறார். சரவெடிகளால் பெரிய பாதிப்பு இல்லை என்றாலும் அதுவும் ஒரு வெடி வகையைச் சேர்ந்ததுதான்.

அவரது சரவெடிகளில் முக்கியமானது புலிகளின் படுகொலைகள் (புலிகள் சுமார் முப்பதாயிரம் பேரைப் படுகொலை செய்திருக்கையில் அவர் அவர்கள் செய்த முன்னூறு பேரின் படுகொலை பற்றிப் பேசியிருந்தாலும்) பற்றிப் பேசியது. அதன் மூலம் அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒரு ‘வித்தியாசமான’, ‘உண்மையைப் பேசும்’ அரசியல்வாதி என்ற பிம்பத்தையும் சில வட்டாரங்களில் சம்பாதித்துக் கொண்டார்.

ஆனால் இப்படியானவர்கள் என்னதான் மாறு வேடங்கள் போட்டாலும் சில சமயங்களில் அவர்களின் வாயாலேயே அவர்களது உள் நோக்கங்கள் வெளியே வந்து குதித்து விடுகின்றன. அதற்கு அவர் அண்மையில் பேசிய ஒரு பேச்சு சான்று.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றிப் பேசிய அவர், தற்பொழுது இலங்கைக்கு இருக்கும் ‘இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு’ என்ற பெயரை, ‘இலங்கை குடியரசு’ அல்லது வெறுமனே ‘இலங்கை’ என்று மாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார். இதன் மூலம் அவர் தனது அரசியல் கண்ணோட்டம் என்ன என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்பொழுது இருக்கும் ‘இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு’ என்ற பெயர், 1972 இல் அப்போதைய சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசு கொண்டு வந்த புதிய குடியரசு அரசியல் யாப்பின் போது வைக்கப்பட்டது. இந்தப் பெயரில் சோசலிசம் என்ற சொல் காணப்பட்டாலும், இந்தப் பெயரின் மூலம் இலங்கை ஒரு சோசலிச நாடாகிவிடவில்லை.



அதுவுமல்லாமல், இந்தப் பெயரே முதலாளித்துவ அரசைக் குறிப்பதுதான். ஏனெனில், உலகில் ஜனநாயக சோசலிசம் என்று சோசலிசம் எதுவும் இல்லை. உண்மையான சோசலிசம் என்பது விஞ்ஞான சோசலிசம்தான். அதனால்தான் உண்மையான சோசலிச நாடுகள் தமது நாட்டில் நிலவும் ஜனநாயகத்தை ‘சோசலிச ஜனநாயம்’ என்று குறிப்பிடுவதுண்டு. இதுபற்றி லெனின் ஏராளமான விளக்கக் கட்டுரைகள் எழுதியுள்ளார். எனவே ‘ஜனநாயக சோசலிசம்’ என்பது முதலாளித்துவத்தை மறைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும்.

எனவே இலங்கையின் பெயரில் காணப்படும் ‘ஜனநாயக சோசலிசம்’ என்பது சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித்துவ ஜனநாயகம்தான். அதனால்தான் இதைப் புரிந்துகொண்ட இலங்கையின் கடைகோடி ஏகாதிபத்திய தாசரும், பிற்போக்குவாதியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1978 இல் தனது புதிய அரசியல் அமைப்பான எதேச்சாதிகாரம் மிக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையிலான அரசியல் அமைப்பைக் கொண்டு வந்தபோது, முன்னைய பிரதமர் சிறீமாவோ சூட்டிய ‘இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு’ என்ற பெயரை நீக்கவில்லை. அவருக்குத் தெரியும் பெயரில் எதுவும் இல்லை செயலில்தான் எல்லாம் என்று.

படுபிற்போக்குவாதியும் மார்க்சிச எதிர்ப்பாளருமான ஜே.ஆர். கூட இலங்கையின் பெயரில் சோசலிசம் என்ற சொல் இருப்பதை ஆட்சேபிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் ஜே.ஆர். தனது வீட்டு நூலகத்தில் மார்க்சிச தத்துவ ஆசிரியர்களின் நூல்களை அடுக்கி வைத்திருப்பதில் பெருமைப்படுபவர் என்றும் கூறப்படுவதுண்டு. இவை எல்லாம் அவரது ‘குள்ளநரி’ தந்திரோபாயங்கள்.

ஜேர்மனியின் சர்வாதிகாரக் கொடுங்கோலனான ஹிட்லர் கூட தனது நாஜிக் கட்சியின் கொள்கை சோசலிசம் என்று சொல்லிக் கொண்டுதான் மனித குவத்தை வேட்டையாடினான்.

ஆனால் எமது ‘குட்டி’ முதலாளித்துவவாதியான சுமந்திரனுக்கு இலங்கையின் பெயரில் சோசலிசம் என்ற சொல் இருப்பது கூட வேப்பங்காயாக கசக்கிறது. அதனால் ஹிட்லர், ஜே.ஆர். போன்றோரைக் கூட விஞ்சி விடுகிறார். எனவே இலங்கையின் பெயரை தாய்வான், தென் கொரியா போன்ற ஏகாதிபத்திய அடிவருடி நாடுகளில் இருப்பது போல வெறும் குடியரசு என்ற சொல்லாக மாற்றும்படி பரிந்துரைக்கிறார்.

இனியென்ன, மிகப் பழமைவாதிகளான ‘யாழ்ப்பாணியவாதிகள்’ இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு தமக்கொரு பெரும் வலதுசாரி தலைவர் கிடைத்தமைக்காகப் பெருமைப்படலாம்.

முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டும் பொருளாதார நிலைமைகளில், இன்னும் சரியாகச் சொன்னால் உற்பத்தி முறையில், மாற்றம் ஏற்பட்டதன் பின்விளைவாகவே உதித்தன. முதலில் கைவினைஞர்களின் கைத்தொழிலிலிருந்து பட்டறை உற்பத்திக்கும், அதன்பிறகு பட்டறை உற்பத்தியிலிருந்து நீராவி மற்றும் எந்திர ஆற்றலைக் கொண்டு நடக்கிற பெரிய அளவிலான தொழில்துறைக்கும், உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றமே இவ்விரு வர்க்கங்களின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று.

-எங்கெல்ஸ்